# தனி மனித நலவாழ்வும், சந்தை பொருளாதாரமும்

## -அரசின் நிலை

-முனைவர் நீலவல்லி, ஜவிட் பெண்கள் நிறுவனம்

நம் நாடு வேறு எப்போதையும் விட ஒரு நெருக்கடியான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. ஒரு ஜனநாயக நாடு என்ற முறையில் மக்களின் நல்வாழ்வுக்காக பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டிய அரசு, சந்தை பொருளாதாரத்தை முழு முனைப்புடன் நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியிருக்கிறது.

தனிமனித நலவாழ்வு என்பது அம்மனிதர்கள் வாழும் சுற்றுச்சூழல், உணவுமுறை, கலாச்சாரம், பழக்கவழக்கம் ஆகியவைகள் தீர்மானிப்பதுடன், அந்த சமூகம் உருவாக்கித் தந்த ஆரோக்கிய பழக்கவழக்கமும், மருத்துவமுறைகளும் கூட முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்தியாவின் யோகா, ஆயுர்வேதம், சித்தா போன்ற மருத்துவமுறைகள் பல நுற்றாண்டுகளாக இந்திய மக்களின் நலவாழ்விற்கு ஆதாரமாக இருந்தாலும், சமீபத்திய ‘அலோபதி’ மருத்துவம் அரசு கொள்கையில் முக்கிய இடத்தை பிடித்திருக்கிறது.

‘தொற்று வியாதிகள்’ எப்போதும் அரசு அல்லது சமூகத்தின் அக்கறைக்கும், நடவடிக்கைக்கும் பாத்திரமாயிருக்கின்றன. பிளேக், அம்மை போன்ற நோய்களை கட்டுப்படுத்த அரசும், சமூகமும் அதிக அக்கறை காட்டியுள்ளது. தடுப்பு மருந்துகள் கண்டுபிடிப்பிற்கு பின் அரசின் ஒருங்கிணைந்த பரவலாக்கப்பட்ட திட்டங்களும், செயல்பாடுகளும் தீவிரப்படுத்தபட்டுள்ளன. பல்வேறு நோய்களான ‘போலியோ’ உட்பட கட்டுபடுத்தப்பட்டுள்ளன.

‘மக்கள் தொகை கட்டுப்பாடு’ என்ற மேலைநாடுகளால் திணிக்கப்பட்ட திட்டத்தினால் ‘குடும்பகட்டுப்பாடு’ என்ற பெயரில் பெண்களின் உடல் மீதான அரசுரிமை அதிகரித்துள்ளது என்பது நாம் அறிந்ததே. ஆணாதிக்க சமூகத்தில் பெண்கள் இனவிருத்திற்காக தன்னுடைய ஆற்றலை பிறரது கட்டுப்பாட்டில் விட்டிருப்பது நாம் அறிந்ததே.

எந்த குழந்தை பெறுவது, எத்தனை குழந்தை பெறுவது, எப்போது பெறுவது என்ற தீர்மானங்கள் பெண்கள் எடுக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருப்பது ஒருபுறம் இருக்க….. எந்த குடும்பகட்டுப்பாடு சாதனம் உபயோகிப்பது, யார் உபயோகிப்பது, யார் அறுவை சிகிச்சை செய்வது போன்ற புதிய தீர்மானங்களும் எடுக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

அரசு ‘குடும்பகட்டுப்பாட்டிற்கு’ இலக்கை நிர்ணயித்து கடைநிலை ஊழியர்களுக்கு திணித்தப்போது நடந்த எண்ணிலடங்கா மனித உரிமை மீறல்கள் சிறிது மட்டுப்பட்டிருந்தாலும், பாதிக்கப்படும் பெண்கள் எண்ணிக்கை குறைந்தபாடில்லை….

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசு மக்கள் நலனில் சலனம் செலுத்த வேண்டிய கட்டாயம் இருந்தாலும், சந்தை சக்திகள் தங்கள் லாபத்திற்காக அரசை இயக்குவது என்பது நடந்துக்கொண்டிருக்கிறது. ஒரு நல்ல அரசுக்கு மக்களின் ஆரோக்கியமும், நலவாழ்வும் சரியாக பேணப்பட்டிருப்பது முக்கிய அளவுகோல். அதே நேரத்தில், சந்தை பொருளாதாரம், மருந்து விலையிலோ, மருந்து சேவையிலோ அதிக லாப நோக்கோடு மக்களை அவதிக்குள்ளக்காமல் பாதுகாப்பதும் அரசின் கடமையாகும்.

பணம் படைத்தவர் மருத்துவ சேவையை விலைக்கு வாங்கினாலும், வறுமையில் இருக்கும் மக்களுக்கும் மருத்துவசேவை அளிப்பதே ஒரு மக்கள் அரசின் கடமையாகும். அதற்கேற்ற வகையில் பொருளாதாரத்தை சீர்படுத்தி, பட்ஜெட் ஒதுக்கீடு செய்வதும் மக்களின் பொருளாதார வாழ்கை தரத்தை உயர்த்தி, அடிப்படை சேவைகள் கிடைக்க செய்வதும் அரசின் இன்றியமையாத கடமையாகும்.

அரசு என்பது மூலதனத்தையும் லாபத்தையும் மட்டுமே பாதுகாக்கும் அமைப்பாக ஆகக்கூடாது என்பது அனைவரும் அறிந்த விதியும், நடைமுறையும் ஆகும்.

நம் நாட்டை பொறுத்தவரை ‘வறுமை’ நம் நாட்டு அரசு நல்வாழ்வு கொள்கையை நிர்ணயிக்கிறது என்று சொல்லாம். 50% விழுக்காட்டை ஒட்டிய மக்கள்தொகை வறுமைக்கோட்டில் கீழ்த் தள்ளப்பட்ட வாழ்வை நகர்த்திக் கொண்டிருக்கும் போது, அத்தியவாசிய மருந்துவ சேவையை இலவசமாக உறுதிசெய்வது அவசியமாகிறது. 80 கோடி மக்கள் ஒரு நாளைக்கு 20 ரூபாய் கூட சம்பாதிக்க முடியாத நிலைக்கு காரணம், கூலியை நிர்ணயிக்க முடியாத வறுமையும், அறியாமையும் ஆகும். ஒருபுறம் கடின உழைப்பால் நாட்டின் 80% GDP வளர்ச்சிக்கு அவர்கள் பங்களித்தாலும் மறுபுறம் வாழ்வின் வள ஆதாரங்களை அவர்கள் இழந்துக் கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் நலனை, வளங்களை மையமாக கொண்ட பொருளாதார கொள்கை தேவைப்பட்டாலும், தற்போது அரசு ஏற்படுத்தியுள்ள ஆரம்ப சுகதார நிலையங்களும், மருத்துவமனைகளும், சுகதார தடுப்பு நோய்களின் பணிகளும் வலுவாக்கப்பட வேண்டிய நிலை உள்ளது. ஆனால் தற்போதைய அதிக வீச்சுள்ள உலகளாவிய சந்தை பொருளாதாரத்தின் ஆதிக்கத்திற்கு, அரசு தொடர்ந்து கட்டுப்பட்டுக் கொண்டுவருகிறது. இந்த நிலை சமூக அக்கறையுள்ளவர்களை வேதனைப்படுத்தவே செய்கிறது.

மருத்துவ சேவையை தோற்றுவித்தவர்கள் அதை பண லாபத்திற்காக பயன்படுத்தியதில்லை. அலோபதி மருத்துவத்தின் தந்தை ஹிப்போகிரட்டஸ் தனது மருத்துவ சேவைக்கு கட்டணம் வாங்கியதே இல்லை. குணமான அரசன் கொட்டிய செல்வத்தை திருப்பி அனுப்பியதாக வரலாறு கூறுகிறது. ஆனால், தற்போதைய மருத்துவ சேவை லாபம் கொழிக்கும் தொழிலாக மாற்றப்பட்டுள்ளது மனிதகுலத்திற்கு விடப்பட்ட வேதனையான சவலாக கொள்ளலாம்.

மருந்து தயாரிக்கும் இரசாயன தொழிற்சாலைகள் கொள்ளை லாபம் ஈட்ட தொடங்கிய பிறகு மருத்துவ சாதனங்கள், மருத்துவ கல்வி, மருத்துவர்கள் சேவை என்ற ஒட்டுமொத்த மருத்துவ உலகம் அதிக லாபம் கொழிக்கும் தொழிலாக மாற்றப்பட்டுள்ளது.

அரசின் கட்டுப்பபடான இலவச மருத்துவ சேவை ஒரு விதத்தில் 'கொள்ளை லாபமாக மருத்துவ தொழிலை மாற்றாமல் வைத்திருக்கும் நிலை தற்போதைய உலக பொருளாதார நிறுவனங்களால் தகர்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

'உலகமயமாக்கல்' என்ற உலகளாவிய பொருளாதார கொள்கை உலக வர்த்தக கழகம் (WTO) உலக வங்கி (world bank) மற்றும் IMF ல் வளரும் நாடுகள் மீது திணிக்கப்பட்டு வருகிறது. உலக மக்களின் கடுமையான எதிர்ப்பை பொருட்படுத்தாமல், GATT உடன்படிக்கை TRIPS என்னும் காப்புரிமை உடன்படிக்கை என்ற பல வர்த்தக உடன்படிக்கைகளில் உலக வங்கியிடம் கடன்பட்ட நாடுகள் கையெழுத்திட்டு நடைமுறைக்கு கொண்டுவந்துள்ளது. இதன்மூலம் மருந்துகள் விலையும், மருத்துவ சாதனங்கள் விலையும் பல மடங்கு உயர்வதை அரசால் தடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உலக வர்த்தக கழகம் விதித்திருக்கும் ஏற்றுமதி, இறக்குமதி கொள்கைக்கு உடன்பட்ட அரசுகள் உடல்நலனுக்கு ஊறுவிளைக்கும் பொருள்களுக்கு தடைவிதிக்க முடியாத நிலையில் உள்ளது. ஆஸ்பிட்டாஸ் பொருள்கள், ஹார்மோன் அடங்கிய இறைச்சி, மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் என்ற உடல்நலனை பாதிக்கும் பொருள்களை தடைசெய்ய கோரி அரசும், மக்களும் எழுப்பும் கோரிக்கைகளை உலக வர்த்தக கழகம் அலட்சியம் செய்து லாபத்திற்காக, வர்த்தகத்திற்கு முன்னுரிமை கொடுத்து வரும் அச்சுறுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

உலக வங்கி கடனிலோ, மானியத்திலோ, நடைமுறைப்படுத்தும் நலத்திட்டங்கள் உலக வங்கியின் கட்டளைக்கும், விதிகளுக்கும் ஏற்ப செயல்படத்தப்படுகிறது. ஒருபுறம், மருந்துகளும், மருத்துவ சாதனங்களும், சம்பந்தப்பட்டவர்களை (மருத்துவர்களை) கூட ஆலோசிக்காமல் திணிக்கப்படும் நிலையும், மறுபுறம் அத்தியவாசிய மருந்துகள், சாதனங்கள் இல்லாத நிலையும் இத்தகைய திட்டங்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உலக வங்கியின் நலத்திட்டங்களை செயல்படுத்த உலக வங்கியே அதற்கான செயல்திட்டத்தையும் அமைப்பு முறையையும் தீர்மானிக்கிறது. இத்தகைய கட்டுமான சீரமைப்பு திட்டங்களும் முறைகளும் (structural Adjustment Policy) ஏற்கனவே நடைமுறையில் உள்ள அமைப்பில் வேலை செய்பவர்களை கணக்கிலெடுப்பதாக தெரியவில்லை. பல்வேறு மூன்றாம் உலக அல்லது வளரும் நாடுகளில் ஒரே விதமான நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தும் உலக வங்கி அதற்கான அமைப்பு முறைகளையும் ஒரே மாதிரி அமுல்படுத்துகிறது, அல்லது அமுல்படுத்த நிர்பந்திக்கிறது. இதனால் ஏற்கனவே நடைமுறையிலுள்ள அமைப்பும், அதில் பணிபுரிபவர்களும் வெகுவாக பாதிக்கப்படுகிறார்கள். நடைமுறையில் உள்ள அமைப்பு பின் விளைவுகளை பற்றி யோசிக்கப்படாமல் தூக்கியெறியப்படுகிறது. இதில் பெருவாரியாக பணியாற்றும் பெண் தொழிலாளர்கள் வாழ்வாதாரங்களை இழந்து அவதிப்படும் நிலைக்கு தள்ளப்படுவது ஒருபுறம் இருக்க, நல்வாழ்வும்,

மருத்துவ சேவையும் குறிப்பாக, தாய்சேய் மருத்துவ சேவை மிகவும் பாதிக்கப்படும் நிலை ஏற்படுகிறது.

இந்தியாவில் பராம்பரிய பிரசவம் பார்க்கும் தாதிகள் ஒரம் தள்ளப்பட்டாலும் லட்சக்கணக்கான அடிமட்ட பெண்களின் வாழ்வாதாரத்தை பறிக்கும் செயலாகியுள்ளது. இந்த தாதிகளின் மூலம் கையாளப்படும் பராம்பரிய மருத்துவ முறைகளும், அறிவும் மறுக்கப்பட்டு, மறக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. நமக்கு நாமே துன்புற்று கொள்ளும் அநீதியாகும். இதனால், மருத்துவ உதவியுடன் உணர்வு பூர்வமான ஆதரவும் பெற்று வந்த கிராமபுற பெண்களுக்கான பிரசவ உதவி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதை உலக வங்கி கவனியாமல் இருப்பதைவிட, நம்நாட்டு மருத்துவ அதிகரிகளும், அரசும் கவனியாமல் இருப்பது மிகவும் வேதனைக்குரியது. இதன் தொடர்ச்சியாக கிராம செவிலியர்கள் பணியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதும் நாடு முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான பெண் தொழிலாளர்களின் நலனை அலட்சியம் செய்வதுடன், பிரசவ வேதனையை புறந்தள்ளுவதும் ஆகும்.

உலக வங்கியிடம் இயலாமையுடன் தன்னை ஒப்படைக்கும் அரசு, உண்மையில் மக்களை விலைக்கு விற்கிறது என்றே சொல்ல வேண்டும். உலக வங்கி சொல்வதற்கெல்லாம் ‘ஆமாம்’ போடுவது நாட்டின் இறையாண்மையை பெரிதும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

‘User fee’, Public Private Partnership, Patient Welfare Society போன்றவைகள் உலக நாடுகள் முழுமைக்கும் உலக வங்கி திணிக்கும் மருத்துவ சேவையை தனியார் மயமாக்கும் முயற்சியாகும். இதனால் மிக கொடுமையான பாதிப்பிற்குள்ளான நாடுகள் ஏராளம். வியட்நாம், பங்களாதேஷ், சைனா, உகண்டா, டின்சேனியா, கென்யா, பொலினியா போன்ற பல நாடுகள் இத்தகைய உலகளாவிய சந்தை பொருளாதார திட்டங்களால் மக்களின் நல்வாழ்வு மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதை பல ஆராய்ச்சி கட்டுரைகள், புள்ளிவிவரங்கள் நமக்கு காட்டுகின்றன.

‘உலகமயமாக்கம்’ என்ற சந்தை பொருளாதாரத்தின் அரசியல் சக்திக்கு நம் அரசு வீழ்ந்து விடாமல் இருக்க மக்களும், பணியாளர்களும் அரசு அதிகாரிகளும் விழிப்புடன் செயலாற்ற வேண்டிய நிலையில் உள்ளோம்.

மக்கள் அரசும், லாபநோக்கோடு இயங்காத உண்மையான மக்களின் கூட்டமைப்பும் நம் மக்களின் நலவாழ்வை தீர்மானிப்பதாக இருக்கட்டும்.